செய்தி வெளியீடு எண்:: **26** நாள்: **25.05.2024**

**<u>தமிழ்நாடு மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் இரண்டு நாள் மாநாடு – 2024, வரும் மே 27 மற்றும் 28 அன்று ஆளுநர் மாளிகை, உதகமண்டலத்தில் நடைபெறவுள்ளது</u>**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், பல்கலைக்கழகங்களின் வேந்தர் திரு.ஆர்.என்.ரவி, அவர்கள் மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் இரண்டு நாள் மாநாட்டை வரும் மே 27, 2024 அன்று உதகமண்டலத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் தொடங்கி வைக்கிறார். ஆராய்ச்சியின் சிறப்பம்சம், நிறுவன மேம்பாடு, தொழில்முனைவோரை ஊக்குவித்தல், ஆசிரியர் உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் உலகளாவிய மனித வளங்களை ஊக்குவித்தல் குறித்த விரிவான விவாதங்கள், விளக்கங்களை மேற்கொள்வதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், பல்கலைக்கழகங்களின் வேந்தர் திரு.ஆர்.என்.ரவி, அவர்கள் மாநாட்டின் தொடக்க மற்றும் நிறைவு விழாவில் தலைமையுரையாற்றயுள்ளார்கள். மாநாட்டின் தொடக்க அமர்வின் போது முதன்மை விருந்தினராக பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் எம். ஜெகதீஷ் குமார், சிறப்புரை ஆற்றவுள்ளார்.

மாநாட்டின் முதல் நாளான (27.05.2024), பின்வரும் அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன:

அ) "பல்கலைக்கழகங்களுக்கான நிறுவன மேம்பாட்டுத் திட்ட தொலைநோக்கு ஆவணம்" - முனைவர். எஸ்.வைத்தியசுப்ரமணியம், துணைவேந்தர், சாஸ்த்ரா பல்கலைக்கழகம்.

ஆ) "எதிர்கால சிறப்பு ஆராய்ச்சி மற்றும் செயற்கை நுண்ணறிவை உருவாக்குதல்"- பேராசிரியர் பார்த்தா சக்ரபர்தி, முன்னாள் இயக்குனர், ஐஐடி-கரக்பூர்.

இ) "புதுமை மற்றும் தொழில்முனைவு" – திருமதி. ஸ்ருதி கண்ணன், தலைவர், CISCO இன்ஜினியரிங்.

ஈ) "தேசிய சிறப்பு கட்டமைப்பின் மூலம் வாழ்நாள் முழுவதும் கற்றலை மேம்படுத்துதல்" - முனைவர் பாரதி ஹரிசங்கர், துணைவேந்தர், அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்.

இரண்டாவது நாளில் (28.05.2024), பின்வரும் அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன:

அ) "இந்திய செஞ்சிலுவை சங்கம் மற்றும் பல்கலைக்கழகங்கள்" - திரு. கார்த்திக் திருநாராயணன், உறுப்பினர், நிர்வாகிகள் குழு, இந்திய செஞ்சிலுவை சங்கம், தமிழ்நாடு மாநில கிளை, சென்னை.

ஆ) "ஆரோவில்லில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பல்வேறு தன்னார்வ மற்றும் பயிற்சி திட்டங்கள்" - முனைவர் ஜெயந்தி எஸ். ரவி, இ.ஆ,ப., செயலாளர், ஆரோவில் அறக்கட்டளை.

இ) "வளர்ந்து வரும் தொழில்துறை தேவைகளுக்கான ஆசிரியர்களின் திறனை உருவாக்குதல்" – பேராசிரியர் ஆர்.வேல்ராஜ், துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் முனைவர் ஜி.ரவி, துணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம்.

ஈ) "உலகளாவிய மனித வளங்கள்" - பேராசிரியர் எச்.டி. சரண், தலைவர், உலகளாவிய மனித வளங்களுக்கான தேசியக் குழு, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE).

ஒவ்வொரு விளக்கக்காட்சிக்குப் பிறகும் ஒரு உரையாடல் அமர்வு திட்டமிடப்பட்டுள்ளது.

மாநாட்டின் போது, மாநில பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் "பல்கலைக்கழகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகள்" என்ற தலைப்பில் விளக்கங்களை வழங்குவார்கள். NET அல்லது UGC-CSIR தேர்வுகளில் தகுதி பெற்ற மாணவர்கள் மற்றும் இளநிலை ஆராய்ச்சியாளர் உதவித்தொகை பெற்ற மாணவர்கள் / அறிஞர்களின் அனுபவப் பகிர்வும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு நாள் மாநாட்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள், மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் பங்கேற்கவுள்ளார்கள்.

……………………………………………………………………………………………

**ஆளுநர் மாளிகை, சென்னை- 22** **வெளியீடு :-**

**நாள்: 25.05.2024** **மக்கள் தொடர்பு அலுவலகம்**